**US – 170**

**IV Semester B.A./B.Sc./B.Sc.(FAD)/B.C.A. Examination, May 2017**
**(Fresh + Repeaters) (2015-16 and Onwards) (CBCS)**
**TAMIL**
**LANGUAGE TAMIL (Paper – IV) (Part – I)**

Time : 3 Hours

Max. Marks : 70

I. **விரிவான விடை தருக.**

1) 'புறங்கூறாமை' குறித்து திருவள்ளுவர் கூறுவனவற்றை விளக்குக. **10**

**(அல்லது)**

'குறிப்பறிதல்' என்ற அதிகாரத்தின் கருத்துக்களைத் தொகுத்து வரைக.

2) காவிரிப்பூம் பட்டினத்தினத்தின் ஊர்கள், அட்டில் சாலைகள், புறச்சேரி, இவற்றை 'பட்டினப்பாலை' வழி விளக்குக. **10**

**(அல்லது)**

திருமாவளவனின் வெற்றிச் சிறப்பினை விளக்கி வரைக.

II. **இடம் சுட்டிப்** பொருள் விளக்கம் தருக.

1) அற்றார் அழிபசி தீர்த்தல், அஃது ஒருவன்
பெற்றான் பொருள்வைப் புழி **4**

**(அல்லது)**

கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு
உரிமை உடைத்து இவ் வுலகு.

2) பொன்கால் புதல்வர் புரவி இன்று உருட்டும் **4**
முக்கால் சிறுதேர் முன்வழி விலக்கும்

**(அல்லது)**

வைகல்தொறும் அசைவுஇன்றி
உல்குசெயக் குறைபடாது

III. அ) **ஒன்று குறித்து திறனாய்க.** **15**

1) இராமலிங்க சுமாமிகளுக்கும், மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, மாயவரம் முனிசீப் வேதநாயகம் பிள்ளை இவர்களுக்கிடையே நடந்த உரையாடலை தொகுத்தெழுதுக.

2) சன்மார்க்க சங்கத்தை நிறுவிய வள்ளலாரின் இறை பணியினை கட்டுரையாக வரைக.

LIBRARY
Sevana College of Arts, Science
Commerce & Management
No. 10, South End Road
BANGALORE - 560 004.

P.T.O.

ஆ) இரண்டிற்கு சுருக்கமான விடை தருக. **(2×5=10)**

1) வீரையன்-பாத்திரப்படைப்பு.

2) இரத்தினம்,முதலியார் பாத்திர படைப்பு.

3) பசித்திரு, தனித்திரு, விழித்திரு-விளக்கம்.

4) ஜே.எச்.கார்டின்ஸ், வேங்கடராமையர், வேலாயுத முதலியார்-நடந்த உரையாடல்.

IV. வாசவி வங்கியின் கிளையினை பெங்களூரில் உள்ள எலக்ட்ரானிக் நகரத்தில் திறக்க வேண்டி அவ்வங்கியின் மேலாளர் என்ற நிலையில் அதன் நிர்வாக பொது மேலாளருக்கு கோப்பு ஒன்றைத் தயார் செய்க. 8

V. மூன்றில் ஒரு பங்காகச் சுருக்கி வரைக. 9

வேலையின்மைச் சிக்கல் உலகில் எல்லா நாடுகளுக்கும் பொது வானதாகும். அது அந்தந்த நாட்டின் பொருளாதார அமைப்பையும், வளர்ச்சியையும் பொறுத்து நாட்டிற்கு நாடு வேறுபடுகிறது.இந்தியாவைப் பொறுத்தவரை அச்சிக்கல் நீண்ட காலமாக இருந்து வருவதாகும். நகர் கிராமப்புறம் என்று பரவலாக எல்லா இடங்களிலும் இச்சிக்கல் உள்ளது. திறமையானவர்களும், விருப்பம் உடையவர்களும் தங்களுக்குப் பொருத்தமான வேலை வாய்ப்பைப் பெற முடியாமல் போவதே வேலையின்மை என்று இச் சொல்லிற்கு விளக்கம் தரலாம். வேலையின் எண்ணிக்கை மிக அதிகமாகவும் உள்ளது. மிகமிக வேகமாக வளர்ந்து கொண்டிருக்கும் மக்கள் தொகைப் பெருக்கம் நாட்டின் முன்னேற்ற மில்லாத நிலை, நமக்கென்றுள்ள பொருளாதார வளங்களைச் சரியாகப் பயன்படுத்திச் கொள்ளாத போக்கு சிறு குடிசைத் தொழில்களுக்கு போடப்படும் முட்டுக்கட்டை, தொழில் உற்பத்தியில் காணப்படும் மந்தநிலை, மனித ஆற்றலைச் சரியாகப் பயன்படுத்திச் கொள்ளாமை, கல்வித்திட்டத்தில் காணப்படும் குறைகள், பெரும் பாலானோர் அரசு அலுவலகங்கள் மற்றும் தொழிற் சாலைகளின் மட்டுமே பணிபுரிய வேண்டும் என்ற கருத்தோடு செயல்படுவது, சுய வேலை வாய்ப்பு திட்டத்திலும், அதற்கான செயல்பாடுகளிலும் சிறுதும் ஆர்வம் காட்டாத தன்மை ஆகியவை இந்தியாவில் வேலையில்லாத திண்டாட்டம் உள்ளதற்கான காரணங்கள் ஆகும்.

---